# கிறிஸ்தவ மூதாதையர்

அக்காலத்தில் ஞாயிற்றுக்கிழமை (வாரத்தின், முதலாவது நாள்) விடுமுறை நாளாக இருக்கவில்லை. இருப்பினும் சூரிய உதயத்துக்கு முன் தமது நாளாந்த பணிகளில் ஈடுபடும் முன்னர் வீடுகளில் ஒன்று சேர்ந்து தியானம் செய்தனர். முதல் இயேசுவை நினைவு கூர்ந்து துதிப் பாடல்கள் பாடி மகிழ்ச்சி அடைந்தனர். குழுவினர்களாக மாறி மாறி பாடல் பாடுவது வழக்கம். பாடலினூடான விண்ணப்பத்தை எமது மூதாதையர் அதிகம் விரும்பினர்.

முக்கியமான தீர்மானங்களை எடுக்கும் முன்னர் இரவு முழுவதும் உபவாசம் இருந்தனர். அவர்களது அனைத்து தேவைகளுக்காவும் கடவுளின் வழிகாட்டுதலை தேடினர். ஆண்டவர் இயேசுவின் நற்செய்தியைக் கூறுவதற்கான தைரியத்தை, பெலத்தை அருளை வேண்டி நின்றனர்.

இன்றும் எமது ஆலயங்கள் ஒன்றிணைந்து தியான வேளைகள் நடாத்தப்பட்டு வருவதை அறிந்திருப்பீர்கள்.

எமது நாட்டுக்கு சமாதானம் வேண்டி இரவு தியானங்கள் பல இடம் பெறுகின்றன. இவ்விதமாக எமது கிறிஸ்தவ மூதாதையர்கள் சென்ற பாதையில் நாமும் நடப்போம்.

கொர்நேலியஸ் என்பவர் கிறிஸ்தவரல்லாத போதும் கடவுளில் விசுவாசம் கொண்ட ஒரு உரோம அதிகாரி என வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இரட்சிப்பின் வழியைக் காட்டுமாறு கடவுளிடம் மன்றாடினான். அவனது மன்றாட்டுக்கு பதில் கிடைத்தது. வானதூதனின் அறிவிப்பின் படி பேதுருவை அழைப்பித்தான். பேதுரு ஆற்றிய உரையைக் கேட்டான். அவனும் அவனது வீட்டாரும் திருமுழுக்குப் பெற்று இயேசுவைப் பின்பற்றினர்.

இவ்வாறாக எமது கிறிஸ்தவ மூதாதையர்கள் தனித்தனியாகவும், கூட்டமாகவும் செய்த விண்ணப்பங்கள் எமது வாழ்க்கைக்கும் முன்மாதிரியாக அமைகின்றன.

## செயற்பாடு

1. ஆதிக் கிறிஸ்தவர்கள் வழிபாட்டுக்காக ஒன்றுகூடிய சந்தர்ப்பங்களைப் பற்றி சிறு குறிப்பு எழுதுக.

2. எமது மூதாதையோர் பின்பற்றிய வழிபாட்டு முறைகள் சிலவற்றைக் குறிப்பிடுக.

3. இவற்றை நாம் இன்னும் பின்பற்றுகிறோம் என்பதற்கு சில உதாரணங்களைக் குறிப்பிடவும்.